# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,

# METTUPALAYAM

## DEPOSITION OF WITNESS

## O.S. 308/2018

## CNR.No.TNCB19000

Date: 11/09/2024 PW1

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | இந்திராணி | **வயது** | 62 |
| **க/பெ** | சுப்பிரமணியன் | **வட்டம்** | மேட்டுப்பாளையம் |
| **விலாசம்** | பட்டக்காரம்பாளையம் | **மாவட்டம்** | கோவை |
| | | **தொழில்** | |

The witness sweared under oaths Act 1969 on this the day of 11th September 2024.

வா.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

**குறுக்கு விசாரணை**

சொத்து பாகப்பிரிவினை கேட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நாங்கள் கூட்டு சுவாதீனத்தில் இருப்பதாக கூறியிருப்பதற்கு ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்துக்கள் எந்த கிராமத்தில் உள்ளது எவ்வளவு உள்ளது என்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியும். க.சஎண்.850 ல் 3 ஏக்கர் 12 செண்ட் உள்ளது. சொத்து சம்பந்தமாக வருவாய் ஆவணங்கள் வாதிகளாகிய எங்கள் பெயரில் இல்லை என்றால் சரிதான்.

தாவா சொத்து யாருக்கு ஆதியிலிருந்து பாத்தியப்பட்டது என்பது குறித்து எனக்கு தெரியாது என்றால் எனது அப்பா சொல்லி தெரியும். 1 ஆம் பிரதிவாதி என் உடன் பிறந்த சகோதரர். 2 ஆம் பிரதிவாதி 1 ஆம் பிரதிவாதியின் மகள் என்றால் சரிதான். எனது தாத்தா ரங்கப்பகவுடர் என்பவரின் இறப்பு மற்றும் வாரிசுச் சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனாரின் வாரிசுச்சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

எனது தாத்தா ரங்கப்பகவுடருக்கு எத்தனை நபர்கள் வாரிசுகள் என்றால் எனது

அப்பா மாதைய கவுடர் சித்தப்பா காரமடை கவுடர் ஆகிய இரண்டு நபர்கள் ஆவார்கள். எனது தாத்தா ரங்கப்பகவுடருக்கு எவ்வளவு சொத்துக்கள் உள்ளன என்றால் க.சா.எண்.850 ல் 3 ஏக்கர் 12 செண்ட் எனது தாத்தாவின் பெயரில் உள்ளது. தாவா சொத்தை யாரிடமிருந்து எந்த ஆவணத்தின் அடிப்படையில் எனது தாத்தாவின் பெயருக்கு வந்தது என்றால் நான் பிறப்பதற்கு முன்பே வாங்கிவிட்டனர்.

( பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி
என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

Sd/- K. Palanivel.

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.